# Learn Sanskrit Through Tamil

Class - 7




Prajnan

ॐ

॥ श्रीगुरुभ्यो नमः ॥

# ॥ विजयतां संस्कृतश्रीः ॥

# संस्कृतश्रीः — पाठमाला १

## ஸம்ஸ்க்ருதஸ்ரீ—பாடமாலா 1

### பாடம் 1

ஸம்ஸ்க்ருத பாஷையில் உயிர் எழுத்துக்கள் 15. மெய் எழுத்துக்கள் 34. உயிர் எழுத்துக்களில் குறில் 5. நெடில் 8. ஆய்த எழுத்துக்கள் 2. மெய்யெழுத்துக்களில் வர்க்க எழுத்துக்கள் 25. மற்றவை 9.

स्वराः—अच्—अक्षराणि—१५.

உயிர் எழுத்துக்கள் 15

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| குறில் | अ | इ | उ | ऋ | ऌ | | | |
| | அ | இ | உ | ரு | லு | | | |
| நெடில் | आ | ई | ऊ | ॠ | ए | ऐ | ओ | औ |
| | ஆ | ஈ | ஊ | ரூ | ஏ | ஐ | ஓ | ஔ |
| ஆய்த எழுத்துக்கள் | अं | अः | | | | | | |
| | அம் | அ: | | | | | | |

[குறிப்பு : *(1)* ऋ, ॠ, ऌ எழுத்துக்களுக்கு ரு, ரூ, லு என்ற உச்சரிப்பு கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் கயிறு, நெரு, வலு, என்ற தமிழ் சொற்களில்போல் அவற்றை குற்றியலுகரமாய் உச்சரிக்கவேண்டும். (2) தமிழில் போல் எ, ஒ குறில் எழுத்துக்கள் கிடையாது. ஏ, ஓ என்ற நெடில் எழுத்துக்களே உண்டு.]



ஆய்த எழுத்துக்கள் இரண்டு. ஒன்று அனுஸ்வாரம். அதன் வரிவடிவம் ं மற்றொன்று விஸர்க்கம். அதன் வடிவடிவம் : இந்த இரண்டும் உயிர் எழுத்துக்களின் பின்னரே வரும். அனுஸ்வாரமும் விஸர்க்கமும் தனித்துக் காட்ட முடியாதாகையால் अं अः என்றே உயிர் எழுத்துக்களுடன் சேர்த்துத் தரப்பட்டுள்ளன. अं अः என்றே அவைகளின் சொல்வடிவம் அல்ல. 'அ'வைத் தொடரும் 'ம்' ம், ':' ம் தான் அவைகளின் உருவம். अं आं इं, अः आः ईः என்றவாறும் அதை எழுதி விளக்கம் தரலாம்.

விஸர்க்கம் பொதுவாகத் தன் முன்னுள்ள உயிர் எழுத்தைப்போல் உச்சரிப்பைப் பெறும். अः அஹ, आः ஆஹ, इः இஹி, ईः ஈஹி, कुः குஹு, भूः பூஹூ, वेः வேஹே, वैः வைஹி, वोः வோஹோ, वौः வௌஹு. விஸர்க்கத்தின் உச்சாரணம் ஹ, ஹா, ஹி என்ற எழுத்துக்களின் உச்சரிப்பின் பாதி அளவே, முழு உச்சாரணமல்ல.

व्यञ्जनानि— हल् —अक्षराणि ३४

மெய் எழுத்துக்கள் 34

| | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|
| க வர்க்கம் | क | ख | ग | घ | ङ |
| | க | க$^{2}$ | க$^{3}$ | க$^{4}$ | ங |
| ச வர்க்கம் | च | छ | ज | झ | ञ |
| | ச | ச$^{2}$ | ஜ | ஜ$^{2}$ | ஞ |
| ட வர்க்கம் | ट | ठ | ड | ढ | ण |
| | ட | ட$^{2}$ | ட$^{3}$ | ட$^{4}$ | ண |
| த வர்க்கம் | त | थ | द | ध | न |
| | த | த$^{2}$ | த$^{3}$ | த$^{4}$ | ந |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ப வர்க்கம் | प | फ | ब | भ | म |
| | ப | ப$^{2}$ | ப$^{3}$ | ப$^{4}$ | ம |
| அந்தஸ்தம் | य | र | ल | व | ळ |
| | ய | ர | ல | வ | ள |
| ஊஷ்மா | श | ष | स | ह | |
| | ச | ஷ | ஸ | ஹ | |

1. श என்றெழுத்தை சவர்க்கத்தில் உள்ள च (ச) போலல்லாது லேசாக (சந்து சக்கரை என்பதைப்போல்) நுனி நாக்கினால் உச்சரிக்க வேண்டும்.

குறிப்பு :- உச்சாரணத்தைக்குறிக்க க$^{2}$, க$^{3}$, க$^{4}$, என்று குறிப்பிடுவர். கரை, தச்சன், பட்டம், தரை, படம், இவற்றில் உள்ள தடிப்பான எழுத்துக்களைப்போல் முதல் எழுத்துக்களை உச்சரிக்கிறோம். 2-வது எழுத்துக்கள் முதல் எழுத்துக்களைப்போல் இருமடங்கு அல்லது மும்மடங்கு அழுத்தமாய் உச்சரிக்கப்பட வேண்டியவை. 3-வது எழுத்துக்கள் மெதுவானவை. (உ-ம்) :- தங்கம், ஜன்னல், குடம், மந்தம், அன்பன் என்ற சொற்களில் உள்ள க, ஜ, ட, த, ப போல் உச்சரிக்க வேண்டியவை. 4 வது எழுத்துக்கள் 3-வதைவிட சற்று கடினமாய் உச்சரிக்கப்பட வேண்டியவை. ஸம்ஸ்க்ருதம் கற்றவரிடம் நேரில் உச்சரிப்பைக் கற்பது நலம்.

குறிகளைச் சேர்க்கும் முறை :—

ஆ, ஈ, ஓ, ஔ என்பதைக் குறிப்பிடும் குறிகள் எழுத்தின் பின்னர் சேர்க்கப்படுகின்றன. இ யைக் குறிப்பிடும் குறி எழுத்தின் முன்னர் சேர்க்கப்படுகின்றது. உ, ஊ, ரு, ரூ, லு இவைகளின் குறி எழுத்தின் செங்குத்துக்



கோட்டின் கீழ் சேர்க்கப்பெறுகின்றன. ஏ ஐ இவைகளின் குறி செங்குத்துக் கோட்டின்மேல் சேர்க்கப்பெறுகின்றது. ஓ, ஔ எழுதும்போது அதிகமாகச் சேர்க்கப்படும் குத்துக் கோட்டின் மேல் கோடு அமைகிறது.

இவைகளில் ऋ, ॠ, लृ என்ற மூன்று எழுத்துக்களைப் பற்றி சிறு விளக்கம். ऋ ஒன்றே தனித்து உயிர் எழுத்தாகச் சொற்களில் வழக்கில் உள்ளது. ॠ ம் लृ ம் தனித்து உயிர் எழுத்தாகச் சொற்களில் இடம் பெறாமல் மெய்யெழுத்துடன் சேர்ந்தே அவை வழங்கி வருகின்றன. அதிலும் ट ட, त த, द த$^{3}$, ध த$^{4}$, न ந, स ஸ என்ற ஆறு மெய் எழுத்துக்களுடன் மட்டுமே ॠ ரூ என்ற உயிர் எழுத்து சேர்ந்து வழக்கில் உள்ளது. மற்ற எழுத்துக்களுடன் சேர்ந்த சொல்வடிவம் காணேம். लृ லு என்ற எழுத்து क க என்ற ஒரு எழுத்துடன் மட்டுமே பொதுவாக வழக்கில் உள்ளது. இதன் காரணமாகப் பின் தந்துள்ள உயிர் மெய்யெழுத்துக் கூட்டு வரிசையில் ॠ, लृ சேர்ந்த மெய்யெழுத்துக்களை விட்டுவிட்டோம். கடைசியில், இவை சேரும் 7 எழுத்துக்களின் வரி வடிவத்தை மட்டும் கொடுத்திருக்கிறோம். அதனால் ॠ, लृ சேர்ந்து மற்ற மெய்யெழுத்துக்கள் எழுதப்படுவதில்லை என்று கருத வேண்டாம்.

| | |
|---|---|
| क् + अ — क க | क् + आ — का கா |
| क् + इ — कि கி | क् + ई — की கீ |
| क् + उ — कु கு | क् + ऊ — कू கூ |
| क् + ऋ — कृ க்ரு | क् + ॠ — कॄ க்ரூ |
| क् + लृ — क्लृ க்லு | क् + ए — के கே |
| क् + ऐ — कै கை | क् + ओ — को கோ |
| क् + औ — कौ கௌ | |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அ | ஆ | இ | ஈ | உ | ஊ | ரு | எ | ஐ | ஒ | ஔ |
| अ | आ | इ | ई | उ | ऊ | ऋ | ए | ऐ | ओ | औ |
| क | का | कि | की | कु | कू | कृ | के | कै | को | कौ |
| ख | खा | खि | खी | खु | खू | खृ | खे | खै | खो | खौ |
| ग | गा | गि | गी | गु | गू | गृ | गे | गै | गो | गौ |
| घ | घा | घि | घी | घु | घू | घृ | घे | घै | घो | घौ |
| ङ | ङा | ङि | ङी | ङु | ङू | ङृ | ङे | ङै | ङो | ङौ |
| च | चा | चि | ची | चु | चू | चृ | चे | चै | चो | चौ |
| छ | छा | छि | छी | छु | छू | छृ | छे | छै | छो | छौ |
| ज | जा | जि | जी | जु | जू | जृ | जे | जै | जो | जौ |
| झ | झा | झि | झी | झु | झू | झृ | झे | झै | झो | झौ |
| ञ | ञा | ञि | ञी | ञु | ञू | ञृ | ञे | ञै | ञो | ञौ |
| ट | टा | टि | टी | टु | टू | टृ | टे | टै | टो | टौ |
| ठ | ठा | ठि | ठी | ठु | ठू | ठृ | ठे | ठै | ठो | ठौ |
| ड | डा | डि | डी | डु | डू | डृ | डे | डै | डो | डौ |
| ढ | ढा | ढि | ढी | ढु | ढू | ढृ | ढे | ढै | ढो | ढौ |
| ण | णा | णि | णी | णु | णू | णृ | णे | णै | णो | णौ |
| त | ता | ति | ती | तु | तू | तृ | ते | तै | तो | तौ |



| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| थ | था | थि | थी | थु | थू | थृ | थे | थै | थो | थौ |
| द | दा | दि | दी | दु | दू | दृ | दे | दै | दो | दौ |
| ध | धा | धि | धी | धु | धू | धृ | धे | धै | धो | धौ |
| न | ना | नि | नी | नु | नू | नृ | ने | नै | नो | नौ |
| प | पा | पि | पी | पु | पू | पृ | पे | पै | पो | पौ |
| फ | फा | फि | फी | फु | फू | फृ | फे | फै | फो | फौ |
| ब | बा | बि | बी | बु | बू | बृ | बे | बै | बो | बौ |
| भ | भा | भि | भी | भु | भू | भृ | भे | भै | भो | भौ |
| म | मा | मि | मी | मु | मू | मृ | मे | मै | मो | मौ |
| य | या | यि | यी | यु | यू | यृ | ये | यै | यो | यौ |
| र | रा | रि | री | रु | रू | | रे | रै | रो | रौ |
| ल | ला | लि | ली | लु | लू | | ले | लै | लो | लौ |
| व | वा | वि | वी | वु | वू | वृ | वे | वै | वो | वौ |
| श | शा | शि | शी | शु | शू | शृ | शे | शै | शो | शौ |
| ष | षा | षि | षी | षु | षू | षृ | षे | षै | षो | षौ |
| स | सा | सि | सी | सु | सू | सृ | से | सै | सो | सौ |
| ह | हा | हि | ही | हु | हू | हृ | हे | है | हो | हौ |
| ळ | ळा | ळि | ळी | ळु | ळू | ळृ | ळे | ळै | ळो | ळौ |

## மெய்யெழுத்தில் கூட்டெழுத்துக்கள்

மெய்யெழுத்துக்கள் அ. क्ष க்ஷ ज्ञ ஜ்ஞ இவை கூட்டு எழுத்துக்கள். இவ்விரண்டும் கூட்டெ ழுத்துக்களின் பிரதிநிதிகளாக இவ்வரிசையில் இடம்பெறுகின்றன. சில நூல்களில் क्ष மட்டுமே இடம்பெறும்.

உயிர் எழுத்துடன் கூட்டெழுத்தைச் சேர்த்து எழுதும் முறை

क्ष क्षा क्षि क्षी क्षु क्षू क्षृ क्षे क्षै क्षो क्षौ
ज्ञ ज्ञा ज्ञि ज्ञी ज्ञु ज्ञू ज्ञृ ज्ञे ज्ञै ज्ञो ज्ञौ

ऋ ऌ சேர்ந்த மெய்யெழுத்துக்கள் அதிகமாக வழக்கில் உள்ளவை—

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| टृ | तृ | दृ | धृ | नृ | सृ | क्लृ |
| ட்ரு | த்ரு | த்³ரு | த்⁴ரு | ந்ரு | ஸ்ரு | க்லு |

र् ऋ என்று உயிர்மெய் எழுத்துக்கள் சேரும்போது அவை தனித்தனியே அப்படியே அமைகின்றன. கூட்டெழுத்தாவதில்லை. உதாரணம் : निरऋतिः क् ऋ வோ, प् ऋ வோ சேரும்போது कृ, पृ என ஒரே எழுத்தாக அமையும்.

ஒரு எழுத்தை உச்சரிக்கத் தேவையான கால அளவை மாத்திரை என்பர். क, कृ முதலிய ஹ்ரஸ்வ (குறில்) எழுத்துக்களைத் தனியே உச்சரிக்க ஒரு மாத்திரை கால அளவு தேவை. के, को முதலிய தீர்க்க (நெடில்) எழுத்துக்களை உச்சரிக்க இரு மாத்திரை கால அளவு தேவை. र् ऋ என்ற கூட்டெழுத்துக்களை உச்சரிக்க ஒரு மாத்திரை கால அளவு போதாதாகையால், அதன் தனிப்பட்ட அமைப்பை ஒட்டி இரு மாத்திரை கால அளவு தேவைப்படுவதால் இரண்டு எழுத்துக்களாகவே அமைப்பது பழக்கத்தில் உள்ளது. ச்லோகமாக (செய்யுளாக) அமைக்கும்போது அதன் ஒவ்வொரு பாதத்திலும் (அடியிலும்) எழுத்துக்கள் இத்தனை இருக்கவேண்டும் என்ற கணக்கு உண்டு. அப்போது कृ, तृ முதலியவற்றை ஒரு எழுத்தாக எடுத்துக் கொள்வர். र् ऋ வை மட்டும் இரு எழுத்தாகக் கொள்வதும் வழக்கம்.



ஒவ்வொரு எழுத்தையும் தனித்துக் குறிப்பிட 'அகாரம்' 'சகாரம்' எனக் கூறுவோம். 'र' வை மட்டும் ரேபம் रेफः எனக் குறிப்பிடவேண்டும். ரகாரம் என்றல்ல.

[ஸம்ஸ்க்ருதம் கற்பவர்கள் எழுத்தை எழுதும்போது முக்கியமாகக் கவனிக்கத்தக்கவை-எழுத்தமைப்பில் ஒரே மாதிரி தோற்றம் உள்ளவை சில. அவைகளைக் கவனித்து எழுதவேண்டும். இல்லாவிடில் மாறுபட்டு விடும். इ-ड-ह, थ-य, भ-म, घ-ध, ढ-द, त-न, प-ष, ब-व இந்த எழுத்துக்களின் அமைப்பில் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை அறியவும். கவர்க்கத்தின் இரண்டாவது எழுத்து ख. இதன் தலைக்கோடு சேர்ந்திருக்கும். र, व என்ற எழுத்துக்களை சேர்த்தெழுதும்போது தலைக் கோட்டைப் பிரித்து र व என்று எழுதவேண்டும். தோற்றத்தில் உள்ள ஒற்றுமையால் ஏற்படும் சிரமங்களைத் தவிர்க்க இந்த கவனம் அவசியம்.].